**ARTICLE 52 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00064**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 161–165
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# சிறுதெய்வ வழிபாடும்.. தென் மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையும்

**சக்திவேலாயுதம் ம[1,*], மேனகா கு[2]**
[1]பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை மற்றும் ஆராய்ச்சி மையம்,சாராள் தக்கர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),பெருமாள்புரம், திருநெல்வேலி., India
[2]உதவிப் பேராசிரியர் ,தமிழ்த்துறை மற்றும் ஆராய்ச்சி மையம்,சாராள் தக்கர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),பெருமாள்புரம், திருநெல்வேலி., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** சக்திவேலாயுதம் ம — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
இவ்வாய்வுக் கட்டுரை, தென் மாவட்ட மக்களின் வாழ்வியலோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்துள்ள சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும், அவற்றின் வரலாற்று, சமூக, பண்பாட்டு முக்கியத்துவத்தையும் ஆராய்கிறது. சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற மக்களின் நம்பிக்கைகள், இயற்கை சார்ந்த வாழ்வியல், முன்னோர் வழிபாடு, வீரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றின் வெளிப்பாடாக விளங்குகிறது. பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து வேறுபட்ட சடங்குகள், வழிபாட்டு முறைகள் மற்றும் நாட்டார் மரபுகளைக் கொண்டுள்ள இவ்வழிபாடு, தென் மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையிலும் சமூக உறவுகளிலும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

**Keywords / திறவுச் சொற்கள்:** சிறுதெய்வ வழிபாடு; தென் மாவட்டங்கள்; நாட்டார் தெய்வங்கள்; நடுகல் வழிபாடு; காவல் தெய்வங்கள்; பெண் தெய்வ வழிபாடு; கன்னி வழிபாடு; பண்பாட்டு வாழ்வியல்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ம,ச., & கு, மே. (2026). சிறுதெய்வ வழிபாடும்.. தென் மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

சிறுதெய்வ வழிபாடு என்பது கிராமப்புற மக்களின் வாழ்வியலோடு கலந்த இயற்கையான வழிபாட்டு முறையை குறிக்கிறது. தமிழர் பண்பாட்டில் சிறுதெய்வங்கள் என்பவை கிராமப்புற அடித்தள மக்களின் வாழ்வியலோடு இயைந்த நாட்டார் தெய்வங்களாகும். இவை இயற்கையை வணங்குதல், வீரம் செறிந்த முன்னோர்களைப் போற்றுதல் மற்றும் சமூகத்தைப் பாதுகாத்தல் போன்ற பண்பாட்டு வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. இவை பெருந்தெய்வ வழிபாட்டிலிருந்து மாறுபட்ட தனித்துவமான சடங்கு முறைகளைக் கொண்டுள்ளன.

தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படும் சிறு தெய்வ வழிபாட்டை, நெறிகளை இக்கட்டுரையில் காண்போம்.

## பொருளுரை

பாதுகாவலராய் நிற்கும் சிறுதெய்வங்கள் ஊருக்கு வெளியே அல்லது எல்லைக் கற்களின் அருகில் திறந்தவெளியில் கோயில்கள் அல்லது மரத்தடிச் சிலைகள் இருக்கும் சிறுதெய்வங்களான காளியம்மன்,

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

மாரியம்மன், பேச்சியம்மன், சுடலை மாடன், மதுரை வீரன், அய்யனார், கருப்பசாமி, முனீஸ்வரன் போன்றவை கிராமப்புற மக்களுக்கு / விளிம்பு நிலை மக்களுக்கு எல்லைச்சாமிகளாய் இன்றளவும் விளங்கி வருகின்றன. களிமண்ணால் செய்யப்பட்ட விலங்கு உருவங்களை நேர்த்திக்கடனாக செலுத்தி வழிபடுதல் இம்முறையில் முக்கிய வழிபாடு ஆகும். விளிம்பில் நிலை மக்கள் தங்களின் இன்ப துன்பங்களை இந்தச் சாமிகளோடு பேசி ஒரு தீர்வை கேட்டு மேற்கண்ட சாமிகள் நீதியை வணங்கும் நீதிமான்களாகின்றனர். குறிப்பாக நம் மாவட்டத்தில் ஆறுமுகமங்கலம் “ஹைகோர்ட் சுடலை“ இதற்கு சான்றாகச் சொல்லப்படுகின்றது.

பிற்கால மற்றும் நாட்டுப்புற இலக்கியங்களில் சுடலை மாடன் குறித்த சான்றுகள் பெரும்பாலும் வாய்மொழி இலக்கியங்களாகவும், வில்லுப்பாட்டு, அம்மன் தாலாட்டு, மற்றும் சிறுதெய்வ வழிபாட்டுப் புராணக் கதைகளாகவும் காணப்படுகின்றன. செவ்வியல் இலக்கியங்களை விட பிற்கால கிராமியப் இலக்கியப் பிரதிகளிலும் வழக்காறுகளிலுமே சுடலை மாடன் பற்றி அதிகமாக பேசப்படுகின்றன. அதிலும் குறிப்பாக வில்லுப்பாட்டுகளில் சுடலைமாடன் கதை சுடலை ஆண்டவர் கதை போன்றவை நீண்ட கதை பாடல்களாக பாடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

## நடுகல் வழிபாடு

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாகக் கல்நட்டு, அவர்களின் பெயர் மற்றும் பெருமைகளைப் பொறித்துத் தெய்வமாக வழிபடும் பழந்தமிழர்களின் பண்பாட்டு மரபு நடுகல் வழிபாடு எனப்படும். இது சங்ககாலம் தொட்டே தமிழர் சமூகத்தில் நிலவி வரும் மிகப்பழமையான முன்னோர் மற்றும் வீர வழிபாட்டு முறையாகும்.

வழிபாட்டிற்கு ஏற்ற நல்ல கல்லைத் தேர்ந்தெடுத்து, கற்செய்தலுக்கான நன்னாளைக் குறித்து, கல்லை நீராட்டிச் சுத்தப்படுத்தி, உரிய இடத்தில் கல்லை நிறுவி, மலர் தூவி, உணவுப் படைத்து சிறப்பு செய்து, வீரனின் புகழைப் பாடி வணங்குவது நடுகல் வழிபாட்டில் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல் பெரும்படை வாழ்த்துதல் என்ற படிநிலைகளாக சொல்லப்படுகிறது.

பகைவரிடமிருந்து கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டுத் தந்து உயிர் துறந்த வீரர்களுக்கு முதன்மையாக நடுகல் எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் கற்களாக இருந்தவை, பின்னர் வீரர்களின் உருவம், அவர் செய்த சாதனை மற்றும் பெயர் பொறிக்கப்பட்ட சிற்பங்களாக மாறின.

வீரன் இறந்தாலும் அவனது ஆன்மா அக்கல் வடிவத்தில் நின்று ஊரைக் காக்கும் என்ற ஐதீகம் மக்களிடம் இருந்தது. பிற்காலத்தில் இந்த நடுகல் வழிபாடே பல ஊர்க் காவல் தெய்வ வழிபாடுகளாக உருமாறியது.

பண்டைய நடுகல் வழிபாடே பிற்காலத்தில் தமிழர்களின் சிறுதெய்வ வழிபாடாக (நாட்டார் தெய்வங்கள்) பரிணாம வளர்ச்சி பெற்றது. இன்று கிராமங்களில் வழிபடப்படும் கருப்பசாமி, சுடலைமாடன், ஐயனார், மதுரை வீரன் மற்றும் மாலையம்மன் போன்ற காவல் தெய்வங்களின் தோற்றத்திற்கு இந்த நடுகல் வழிபாடே அடிப்படையாகும்.

## பெண் தெய்வ வழிபாடு

பெண் தெய்வ வழிபாடு என்பது தமிழர்களின் தொன்மையான பண்பாட்டில் இயற்கையையும் சக்தியையும் தாயாகப் போற்றும் ஒரு வழிபாட்டு முறை ஆகும்.மனித குலத்திற்கு உயிரும் உணவும் அளித்து காக்கும் ஆற்றல் பெண்ணிடம் இருப்பதாகப் பண்டைக் காலத்தில் மக்கள் நம்பினர்.செழுமையின் அடையாளமாகப் பெண் கருதப்பட்டதால், இயற்கையைத் தாயாக உருவகித்து வழிபட்டனர். பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் பெண் தெய்வங்களின் பெயர்களும் அவற்றின் வழிபாடுகளும் பற்றிய குறிப்புகள் உள்ளன.

மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், திரௌபதையம்மன், அங்காளம்மன் மற்றும் இசக்கி போன்ற தெய்வங்கள் கிராமப் புறங்களில் காவற் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. பார்வதி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி மற்றும் அகிலாண்டேஸ்வரி போன்ற வடிவங்களிலும் சக்தி வழிபாடு நீடிக்கிறது.

இத்தெய்வங்களுக்கு விரதமிருந்தும், உயிர்பலி கொடுத்தும் வழிபாடு செய்யப்படுகின்றது. இவை மட்டுமல்லாமல் வேண்டுதல், நேர்த்திக்கடன், தீமிதித்தல், தேர் இழுத்தல் போன்றனவும் வழிபாட்டு நிலையில் அடங்கும். பெருந்தெய்வங்களைப் போல தினசரி பூசைகளோ, படையல்களோ இத்தெய்வங்களுக்குச் செய்வதில்லை.

இப்பெண் தெய்வங்கள், ஊர்த் தெய்வங்கள், பொதுத் தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலதெய்வங்கள், வீட்டுத் தெய்வங்கள், பத்தினித் தெய்வங்கள், காவல் தெய்வங்கள், எல்லைத் தெய்வங்கள் எனப் பலநிலைகளில் வணங்கப்படுகின்றன. இப் பெண் தெய்வங்கள் அம்மன் என்ற பொதுவான பெயரால் அழைக்கப்படுகின்றனர். இத்தனை பெண் தெய்வங்கள்தான் என்று எண்ணிக்கையில் சொல்லமுடியாத அளவுக்கு பெண் தெய்வங்கள் சமூகத்தில் வழிபடப்பட்டு வருகின்றன.

## இன்றைய வழிபாட்டு முறைகள்

நாட்டுப்புற மக்கள் தங்கள் வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்தவர்களையோ, அல்லது வீட்டில் இருந்த மூதாதையர்களையோ, விபத்தினால் இறந்த கன்னிப் பெண்களையோ வணங்கும் வழக்கத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு வணங்கும் முறை வீட்டுத்தெய்வ வழிபாட்டு முறையாகும்.இதனை “இல்லுறைத் தெய்வம்” என சங்க இலக்கியத்தில் குறிப்பதைக் காணலாம்.

நடுகல் வழிபாடே காலப்போக்கில் குலதெய்வம் வழிபாடாக மாறியது எனலாம். 'குலம்' என்பது ஒரு குறிப்பிட்ட மூதாதையரின் மரபில் தோன்றியதன் வாயிலாக ஒருவருக்கொருவர் உறவு கொண்டுள்ள குழுஅமைப்பு ஆகும். இரத்த உறவுடைய பங்காளிகள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்களாக கருதப்படுவர். தன் குலத்தின் முன்னோர்களில் சிறந்து விளங்கியவர்களையும்,குல மக்களுக்காக உயிர் தியாகம் செய்தவர்களையும் தெய்வமாக பாவித்து வணங்கி வழிப்பட்டனர். இவ்வழிபாடு ஒவ்வொரு குலத்திற்கும் மாறுபடும்

பல்வேறு குழுவினைச் சார்ந்தவர்கள் ஓர் இனமாக நின்று வணங்கும் முறைக்கு இனத்தெய்வ வழிபாடு என்று பெயர். ஊரில் உள்ள மக்களை

காக்கும் தெய்வங்களை வணங்கும் வழக்கத்திற்கு ஊர்த்தெய்வ வழிபாடு என்று பெயர். பெரும்பாலும் மாரியம்மன் கிராமதேவதையாக ஊரின் நடுவிலும் ஐயனார் காவல் தெய்வமாக ஊரின் எல்லையிலும் அமைத்து அதை ஊர்த்தெய்வங்களாக வணங்கப்படுகின்றன.

சாதி, மதம், இனம் என்ற வேறுபாடுகளைக் கடந்த தெய்வ வழிபாட்டிற்கு வெகுசனத்தெய்வ வழிபாடு என்று பெயராகும். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி, சமயபுரம் மாரியம்மன், கோட்டை மாரியம்மன், வீரபாண்டி மாரியம்மன், இராஜ காளியம்மன், வெக்காளியம்மன், ஐயனார், சனீஸ்வரன் போன்ற தெய்வ வழிபாடுகள் முதலில் சிறுதெய்வ வழிபாடாக இருந்து வெகுசனத்தெய்வ வழிபாடாக மாற்றம் கொண்டவையாகும்.

## கன்னி வழிபாடு

சிறு தெய்வ வழிபாட்டில் கன்னி வழிபாடு என்பது திருமணத்திற்கு முன்பே இறந்துபோன கன்னிப் பெண்களை அல்லது சிறுமிகளைத் தெய்வமாகப் போற்றி வணங்கும் ஒரு பாரம்பரிய கிராமிய வழிபாடாகும்.குடும்பத்தில் அல்லது குலத்தில் திருமணமாகாமல் சிறு வயதிலேயே இறந்துவிட்ட இளம் பெண்களை முன்னோர்களின் ஆன்மாவாகக் கருதுகின்றனர்.கன்னிப் பெண்கள் இயற்கையாகவே தூய்மையானவர்கள் என்பதால், அவர்களைச் சக்தியின் வடிவமாகப் பாவித்து வழிபடுகின்றனர்.இத்தகைய கன்னித் தெய்வங்கள் தங்கள் குலத்தைக் காப்பதாகவும், குடும்பத்திற்கு வரவிருக்கும் தீமைகளைத் தடுத்து நிற்பதாகவும் நம்பப்படுகிறது.

வீட்டின் கன்னி மூலையிலும் (தென்மேற்கு மூலை), கிராமங்களின் எல்லைப் பகுதியிலும் அல்லது குலதெய்வக் கோயில்களிலும் கன்னித் தெய்வங்களுக்குச் சிறிய பீடம் அமைத்து வழிபடுகின்றனர். ஆடி மாதம், குறிப்பாடிப் பெருக்கு அல்லது ஆடி மாதக் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்புப் பூஜைகள் செய்யப்படுகின்றன. மஞ்சள், குங்குமம், பூக்கள், புதிய பாவாடை-சட்டை அல்லது புடவை, மற்றும் கன்னிப் பெண்களுக்குப் பிடித்தமான நிவேதனப் பொருட்களைப் படைத்து வணங்குகிறார்கள்.

குடும்பத்தில் தடைபடும் திருமணத் தடைகள் நீங்கும். வம்சவிருத்தி பெருகும் மற்றும் தீய சக்திகள் விலகும்.குலதெய்வம் அறியாதவர்கள் கன்னி தெய்வத்தை முறையாக வணங்கினால் குடும்பத்தில் அமைதியும் சுபிட்சமும் உண்டாகும் என்று நம்பப்படுகிறது. கன்னி தெய்வங்கள் இந்த நவீன யுகத்திலும் பிரதான தெய்வமாக விளங்கி வருகிறது. பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

## முடிவுரை

பல்வேறு குலம், இனம், மொழி என்ற பாகுபாடுகள் இருப்பதால் எண்ணில் அடக்காத சடங்குகள் கொண்டதாக சிறுதெய்வ வழிபாடு காணப்படுகிறது. இந்த சிறுதெய்வ வழிபாட்டோடு இந்து சமய சடங்குகள் பல பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக பலியிடுதல், ஆணி செருப்பணிதல், சூரைக் கொடுத்தல், கோழிக் குத்துதல் போன்ற சடங்குகள் சிறுதெய்வ வழிபாட்டிற்கு உரியன. இந்த சடங்குகளை பெருதெய்வ வழிபாட்டில் மக்கள் பின்பற்றுவதில்லை.

சிறு தெய்வ வழிபாடானாது இன்று உலகமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் சமூக நகர்வுகள் காரணமாகப் பெரும் பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது. கிராமப்புற எளிய மக்களின் வழிபாட்டு முறையாக இருந்த சிறு தெய்வ வழிபாடு, இன்று நகரமயமாகுதல் மற்றும் பெருந்தெய்வமயமாக்கல் ஆகியவற்றுக்கு உட்பட்டு மாறி வருகிறது. கோவில் வழிபாடு, வழிபாட்டு முறையில் மாற்றங்கள், சிறு தெய்வ தோற்ற மாற்றங்கள், டிஜிட்டல் காணிக்கை, டிஜிட்டல் விளம்பரங்கள் நேரலை மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் செயல்பாடு, பெரிய கொடை விழாக்கள், பலி கொடுப்பதில் மாற்றங்கள் என பல மாற்றங்களைக் கண்டு சிறு தெய்வ வழிபாடு இன்று இன்னும் இன்னும் நம்மோடு இருப்பது நமக்கான வரம் என்று மட்டுமே சொல்ல முடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. பண்பாட்டு அசைவுகள் (தொ.பரமசிவன்)
2. தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும் (தொ.பரமசிவன்)

© 2026 சக்திவேலாயுதம் ம, மேனகா கு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..